## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 2-3 - ஊனில்வாழ்
## (ஆழ்வார் பகவதனுபவத்தைப் பூர்ணமாகப் பெற்று, உசாத்துணையான நித்யசூரிகளோடு எப்போது கூடப்போகிறோம் என்று ஆசைப்படுதல்)

2807 * ஊனில் வாழுயிரே! * நல்லை போ உன்னைப் பெற்று *
வானுளார் பெருமான் * மதுசூதன் என்னம்மான் **
தானும் யானும் எல்லாம் * தன்னுள்ளே கலந்தொழிந்தோம் *
தேனும் பாலும் நெய்யும் * கன்னலும் அமுதுமொத்தே 1

2808 ஒத்தார் மிக்காரை * இலையாய மாமாயா! *
ஒத்தாய் எப்பொருட்கும் உயிராய் ** என்னைப் பெற்ற
அத்தாயாய்த் தந்தையாய் * அறியாதன அறிவித்த[1] *
அத்தா! நீ செய்தன * அடியேன் அறியேனே 2

2809 அறியாக் காலத்துள்ளே * அடிமைக்கண் அன்பு செய்வித்து *
அறியா மாமாயத்து * அடியேனை வைத்தாயால் **
அறியாமைக் குறளாய் * நிலம் மாவலி! மூவடி என்று *
அறியாமை வஞ்சித்தாய் * எனதாவியுள் கலந்தே 3

2810 எனதாவியுள் கலந்த * பெரு நல்லுதவிக் கைம்மாறு *
எனதாவி தந்தொழிந்தேன் * இனி மீள்வது என்பதுண்டே? **
எனதாவி ஆவியும் நீ * பொழில் ஏழும் உண்ட எந்தாய்! *
எனதாவியார்? யான் ஆர்? * தந்த நீ கொண்டாக்கினையே 4

2811 இனியார் ஞானங்களால் * எடுக்கலெழாத எந்தாய் *
கனிவார் வீட்டின்பமே! * என் கடல்படா அமுதே! **
தனியேன் வாழ் முதலே! * பொழில் ஏழும் ஏனமொன்றாய் *
நுனியார் கோட்டில் வைத்தாய் * உனபாதம் சேர்ந்தேனே 5

2812 சேர்ந்தார் தீவினைகட்கு * அருநஞ்சைத் திண்மதியை *
தீர்ந்தார் தம் மனத்துப் * பிரியாத அருயிரை **
சோர்ந்தே போகல் கொடாச் சுடரை * அரக்கியை மூக்கு
ஈர்ந்தாயை * அடியேன் அடைந்தேன் * முதல் முன்னமே 6

2813 முன் நல்யாழ் பயில் நூல் * நரம்பின் முதிர் சுவையே! *
பன்னலார் பயிலும் * பரனே! பவித்திரனே! **
கன்னலே! அமுதே! * கார்முகிலே! என் கண்ணா! *
நின்னலால் இலேன் காண் * என்னை நீ குறிக்கொள்ளே 7

2814 குறிக்கொள் ஞானங்களால் * எனையூழி செய்தவமும் *

[1] அறிவித்து

கிறிக்கொண்டு இப்பிறப்பே * சில நாளில் எய்தினன் யான் **
உறிக்கொண்ட வெண்ணெய் பால் * ஒளித்துண்ணும் அம்மான் பின் *
நெறிக்கொண்ட நெஞ்சனாய்ப் * பிறவித்துயர் கடிந்தே 8

2815 கடிவார் தண்ணந்துழாய்க் * கண்ணன் விண்ணவர் பெருமான் *
படிவானமிறந்த * பரமன் பவித்திரன் சீர் **
செடியார் நோய்கள் கெடப் * படிந்து குடைந்தாடி *
அடியேன் வாய் மடுத்துப் * பருகிக் களித்தேனே 9

2816 களிப்பும் கவர்வும் அற்றுப் * பிறப்புப் பிணி மூப்பு இறப்பற்று *
ஒளிக்கொண்ட சோதியுமாய் * உடன்கூடுவது என்று கொலோ? **
துளிக்கின்ற வானிந்நிலம் * சுடராழி சங்கேந்தி *
அளிக்கின்ற மாயப்பிரான் * அடியார்கள் குழாங்களையே 10

2817 * குழாங்கொள் பேரரக்கன் * குலம் வீய முனிந்தவனை *
குழாங்கொள் தென்குருகூர்ச் * சடகோபன் தெரிந்துரைத்த **
குழாங்கொள் ஆயிரத்துள் * இவை பத்தும் உடன் பாடி *
குழாங்களாய் அடியீருடன் * கூடி நின்றாடுமினே 11

**அடிவரவு:** ஊனில் ஒத்தார் அறியா எனது இனி சேர்ந்தார் முன்னல்
குறிக்கொள் கடிவார் களிப்பு குழாங்கொள் ஆடி